# எவைகளை விரும்புகின்றீர்கள்?

ஒரு ஊரிலே பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்த வாலிபனொருவன், தன் அயலிலே வாழ்ந்து வந்த மனிதனொருவனுக்கெதிராக குற்றம் ஒன்றை செய்து விட்டான். அந்த மனிதனானவன் சில சாட்களோடு, ஊரின் பொலிசாரிடத்தில்சென்று முறையீடு செய்யும்படி ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அப்படியாக அந்த மனிதனாவன், அந்த வாலிபனுக்கெதிராக குற்றச்சாட்டை பொலிசாரிடம் தெரியப்படுத்தினால், அவர்கள் நிச்சயமாக அந்த வாலிபனை கைது செய்வார்கள் என்பதை அந்த வாலிபனின் குடும்பத்தினர் நன்கு அறிந்திருந்தார்கள். அந்த வாலிபனின் பெற்றோரின் மனம் பதைபதைத்து. அவர்கள் கண்ணீரோடு அந்த மனிதனிடம் விரைந்து சென்று, தங்கள் மகனானவனுக்காக பரிந்து பேசினார்கள். தங்களுக்கு இரங்கும்படி வேண்டிக் கொண்டார்கள். முதலாவதாக அந்த பெற்றோரின் பக்கத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம். நீங்கள் அந்த வாலிபனின் பெற்றோராக இருந்தால், அந்த மனிதனாவன் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள்? அவன் பொலிசாரிடம் சென்று குற்றச்சாட்டை பதிவு செய்யாமல், உங்கள் மகனானவனை மன்னித்து விட வேண்டும் என்று விரும்புவீர்களல்லவோ? அப்படியானால், நீங்கள், உங்களுக்கு எதிராக குற்றம் செய்தவர்களை அந்த பிரகாரமாக மன்னித்து விட வேண்டும். இரண்டவதாக, அந்த மனிதனானவன், வருங்காலங்களில் தனக்கு தயவும் இரக்கமும் கிடைக்கும்படி, தற்போது தனக்கெதிராக குற்றங்கள் செய்தவனை மன்னித்து விடுவது அவனுக்கு நன்மையாகதாக இருக்கும். ஆனால், இக்கட்டான சூழ்நிலைகளின் மத்தியிலே விசுவாசிகள் அகப்பட்டுக் கொள்ளும் போது, பொதுவாக, பொறுத்த சமயத்திலே தேவனுடைய வார்த்தையை மறந்து, மாம்சத்திலே செயற்பட்டு விடுகின்றார்கள். குற்றங்கள் சாட்சிகள் வழியாக உறுதி செய்யப்பட்டு, நிரூபிக்கப்பட்டால், அதற்குரிய தகுந்த தண்டனையை வழங்குவது, இந்த உலகத்தின் நீதியாக இருக்கின்றது. அது நியாமம் என்று இந்த உலகத்திலுள்ள சன்மார்கர்களும் ஏற்றுக் கொள்வார்கள். “மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். சுத்த மனசாட்சியை பெற்ற நீங்கள் மற்றவல்களுக்கு நன்மையானதையே செய்ய நாடுங்கள்.

**மத்தேயு 7:12**

**ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்;**

**ஜெபம்**: நன்மைகளின் ஊற்றாகிய என் தேவனாகிய கர்த்தாவே, நான் தீமைக்கு கைமாறகா தீமை செய்யாதபடிக்கு, உம்ஜமப் போல நன்மை செய்யும் உள்ளத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிள்ளைகளுக்குரிய சுபாவம்

நன்மை செய்வார்கள் என்று எப்படி எதிர்பாரக்க முடியும்? "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்பதின் கருப்பொருள் என்ன என்பதை நன்றாக அறிந்து கொள் ளுங்கள். இந்த வார்த்தையை தன் னைப் பின்பற்றி செல்பவர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கூறினார். நாம் அவரை பின்பற்றுகின்றவர் களா இருந்தால், துர்மனசாட்சி நீங்க கழுப்பட்ட நமக்கு, மனுஷர்கள் யாவ ரும் நன்மை செய்ய வேண்டும் என்பதையே நாம் எப்போதும் விரு ம்புகின்றவர்களாக இருப்போம். அந்த சிந்தையின்படியே தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வாழ பழகிக் கொள்ள வேண்டும். நாம் அப்படி விரும்புவதால், மனுஷர்கள் எப்போதும் நமக்கு நன்மை செய்வார்கள் என்பது பொருளல்ல. இந்த உலகத்திலே நன்மைக்கு பதிலாக தீமை செய்கின்றவர்கள் இருக்கின்றார்கள். "நன்மைக்குத் தீமைசெய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது." என்று நீதிமொழிகள் 17ம் அதிகாரம் 13ம் வசனத்திலே வாசிக்கின்றோம். அதுபோது, நம்முடைய மனசாட்சி சுத்தமாக இருந்தால், அங்கே தீமை தங்குவதற்கு இடமில்லை. தேவனைப் பின்பற்றுகின்றவர்களுக்கு, "தேவனே தம்மு டைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." ஆதலால் நாம் ஜீவவசன த்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசி க்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்ற மற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளு மாயிருக்கும்படிக்கு, தேவனுடைய நாமத்தினிமித்தம் செய்யும் எல்லாவ ற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்வதை சுபாவமாகிக்க கொள்ள வேண்டும். இதை எந்த மனுஷடைய பெலன த்தினாலும் நடத்தி முடிக்க முடியாது. ஆனால், பெலவீனராகிய நம்மை பெலப்படுத்தும் தேவ கிருபையானது, நமக்கு அளிக்கப் பட்டிருக்கி ன்றது. நமக்கு வாசம் செய்யும் ஆவியானவர்தாமே, சகல சத்தியத் திலும் நாம் நடக்கும்படிக்கு நம்மை வழிநடத்திச் செல்கின்றார். கிறிஸ்துவின் நாளிலே உண்டாகும் பெருமகிழ்சியை விசுவாச கண்க ளால் காணம்படிக்கு பிரகாசமுள்ள மனசாட்சியை தந்து நம்மை பெல ப்படுத்தி நடத்திச் செல்கின்றார். எல்லா கிரியைகளுக்கும் பலனளிக்கும் பரம பிதா நமக்கு இருக்கின்றார்.

**ரோமர் 12:17**

**ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்குமுன் பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்.**

**ஜெபம்**: பரலோக பிதாவே, புறம்பேயிருக்கின்றவர்களதும், உம்மை அறிந்து அறியாமல் வாழ்கின்றவர்களதும் அநியாயமான செயல்களை கண்டு, நான் சோர்ந்து பின்வாங்கிப் போகாதபடிக்கு என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | நவம்பர் 3 | 🕮 மாலை வாசகம் – லூக்கா 6:36

# உன்னதமானவருக்கு பிள்ளைகளாயிருப்பீர்கள்

**மத்தேயு 5:46**

**உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன?**

"அந்த மனுஷன் எப்போதுமே கேடான காரியங்களையே செய்து வருபவன். அவனிடத்டதில் நன்மையை எதிர்பார்க்க முடியாது. அவன் எனக்கு எதையும் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு இல்லை. எனவே, அவனுடைய குறைவிலே நான் அவனுக்கு உதவி செய்யப் போவதில்லை" என்று ஒரு விசுவாசியாவன் கூறிக் கொண்டான். அந்த விசுவாசியானவன் "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்று நம் ஆண்டவராகிய இயேசு கூறிய வசனத்தை இந்த உலக தத்துவங்களின்படி தவறாக புரிந்து கொண்டு, அந்த மனுஷனிடமிருந்து எதையும் நான் எதிர்பார்க்கவில்லை எனவே நான் நன்மையை செய்யாமல் இருப் பது நியாயம் என்று எண்ணிக் கொண்டான். பிரியமான சகோதர சகோ தரிகளே, நாம் உன்னதமான தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றோம் என்பதை ஒருபோதும் மறந்து போய்விடக்கூடாது. எனவே, நாம் இந்த உலக நியதிகளின்படியல்ல, அதற்கு மேலானவைகளை தேடுகின்றவர்களாயும், மேன்மையானவைகளை நடப்பிக்கின்றவர்களாகவும் இருக்கின்றோம். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள் அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச்செய்கிறார்களல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் என்று ஆண்டவராகிய இயேசு மலைப் பிரசங்கத்தில் 5ம் அதிகாரத்தில் கூறியதை முன்னைய மாதங்களிலே நாம் தியானித்ததை மறந்து போய்விடாததிருங்கள்.

**ஜெபம்:** உன்னதமான பரலோக தேவனே, உம்முடைய பிள்ளை என்று அழைக்கப்படுவதற்கு நீர் எனக்கு கொடுத்த பரம பாக்கியத்திற்காக நன்றி. உம்முடைய பிள்ளையான நான் வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| செவ்வாய்| நவம்பர் 4 | 📖 மாலை வாசகம் – 2 கொரி 3:18 |
|---|---|

# கிறிஸ்துவின் சாயலில் வளர வேண்டும்

"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவரா யிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திரு க்கிறார்." என்று ரோமர் 8ம் அதிகாரம் 29 வசனத்திலே வாசிக்கின்றோம். நம்முடைய அழைப்பு எப்படிப்பட்டதென்று பாருங்கள். இந்த உலகிலே, மனிதர்கள் தாங்கள் இன்னாரை போல, கல்வி கற்க வேண்டும். அந்த தலைவரைப்போல வாழ வேண் டும் என்று சொல்லிக் கொள் வார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் இன்னாரைப் போல பெரியவர்களாக வர வேண்டும் என்று விரும்புவார்கள். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்". மனித குலம் நித்திய மரணத்தின்று மீட்படையும்படி தம்முடைய ஒரே பேறான குமாராகிய இயேசு கிறிஸ் துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அநேகர் குமாரன ஏற்றுக் கொள்ளவில்லை. "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம் மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்க ளில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன் மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங் களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசு வாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டா னதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபேசியர் 2:4-8). தாயின் கருவிலி ருந்து நம்மை வேறு பிரித்தார். நம்மை முன்குறித்தார். "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழை த்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான் களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." எனவே, நாம் கிறிஸ்துவின் சாயலிலே வளர வேண்டும். மற்றவர்கள் என்ன செய் யாமல் இருக்கின்றார்கள் என்று அவர்களின் வாழ்க்கையின் நடைமு றைகளை பார்த்து, அவர்களை குறித்து விமர்சித்து, காலத்தை விரயமா க்காதபடிக்கு, உங்களுக்கு கொடுக்கப்பட்ட நாட்களை பிரயோஜன ப்படுத்திக் கொள்ளுங்கள். நன்மையே சிந்தித்து, அதையே நிறைவேற்ற பிரயாசப்படுங்கள். தேவ ஆவியானவர் உங்களை வழிநடத்துவாராக.

**கொலோசெயர் 3:2**

**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங் கள்.**

**ஜெபம்:** மேன்மையானவைகளை நாடித் தேடும்படி என்னை அழைத்த தேவனே, மற்றவர்களின் தீமையான செயல்களை பார்த்து சோர்ந்து போகாமல், கிறிஸ்துவின் சாயலிலே நான் வளர எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன்| நவம்பர் 5

📖 மாலை வாசகம் – யாக்கோபு 2:8

# நியாயப்பிரமாணத்தின் முழுமை

நியாயப்பிரமாணத்தைக் குறித்த தர்கங்கள் அன்று மட்டுமல்ல, இன்றும் தேவ ஜனங்கள் மத்தியிலே இருந்து வருகின்றது. நியாயப்பிரமாணது கொடுக்கப்பட்ட காலத்திலே, அநேக விஷயங்களைக் குறித்து, தேவனாகிய கர்த்தர் விளக்கிக் கூறியிருக்கின்றார். அவைகள் இன்று விசுவாசிகள் பின்பற்ற வேண்டுமா? அல்லது அவைகளை நாம் முற்றாக தள்ளிவிட முடியுமா? இன்றய தியானத்திலே அதை நாம் சுருக்கமாக பார்ப்போம். மலைப் பிரசங்கத்திலே ஆண்டவராகிய இயேசுதாமே, தம்மை பின்பற்றி வருகின்றவர்களை நோக்கி: மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம் என்று கூறியிருகின்றார். இந்த சந்தர்ப்பத்திலே, ஆண்வராகிய இயேசு தாமே, அயலவனைக் குறித்த காரியத்திலே, நியாயப்பிரமாணத்தின் நோக்கம் இன்னதென்று ஒரு வசனத்திலே சுருக்கமாக கூறியிருக்கின்றார். எனவே, அதன் தார்பரியத்தை உணர்ந்து, அந்த வசனத்தின் உள்ளடக்கத்தை நாம் இன்றும் செய்து வருகின்றோம். வேறொரு சமயத்திலே, பரிசேய வர்க்கத்தை சேர்ந்து நியாயசாஸ்திர் ஒருவன் ஆண்டவரரிய இயேசுவை சோதிக்கும்படி: போதகரே, நியாயப்பிரமா ணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. இது முதலாம் கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனஙடகளும் அடங்கியிருக்கிறது என்றார். பாருங்கள், இந்த இரண்டு வசனங்களிலும் நியாயப்பிரமாணத்தின் முழுமையை ஆண்டவராகிய இயேசு சுருக்கமாக கூறியிருக்கின்றார். வசனங்களிலே சுருமாக இருந்தாலும், நடைமுறையிலே இவை சுருக்கமானவைகள் அல்ல. எனவே, வேதத்தைக் குறித்த வாக்குவாதங்களை விட்டுவிட்டு ஆண்டவராகிய இயேசு கூறிய வார் த்தைகளின் கருப்பொருளை உணர்ந்து, கற்பனைகள் கொடுக்கப்பட்ட நோக்கத்தை மனதார நிறைவேற்ற பழகிக்கொள்ளுங்கள்.

**மத்தேயு 22:40**

இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்.

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, உம்முடைய கற்பகைளின் கருப்பொருளை உணர்ந்து, அவைகளை நான் முழு மனதோடு கைகொள்ள எனக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜீவனுக்கு செல்லும் வழி

இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து, மத்தேயு 5ம் அதிகாரத்திலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டவராகிய இயேசுவின் மலைப் பிரசங்கத்தை, வசனம் வசனமாக தியானித்து வருகின்றோம். இந்த இடத்திலே பற்பல காரியங்களை குறித்து ஆண்டவராகிய இயேசுதாமே விளக்கிக் கூறியிருக்கின்றார். தம்மை பின்பற்றுகின்றவர்கள் வாழ வேண்டிய வழியை காண்பித்திருக்கின்றார். அந்த வழியின் முடிவு எங்கே? அந்த வழியாய் செல்கின்றவர்கள் ஈற்றிலே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கின்றார்கள். எனவே, பரிசுத்த வேதாகமத்தை பிரித்து பிரித்து கற்றுக் கொண்டாலும், வேதத்தின் பிரதான நோக்கத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்த உலக வாழ்க்கையிலும் அதனால் பலன் உண்டு, ஆனால் அதற்காக மாத்திரம் நாம் வேதத்தை பின்பற்றுவோமாக இருந்தால், நம்முடைய வாழ்க்கையின் முடிவு பரிதாபமாக இருக்கும் என்று வேதம் கூறுகின்றது. நித்திய வாழ்வுக்கு செல்லும் வழியை ஏற்படுத்தி, அதை நமக்கு காண்பிப்பதற்காகவே ஆண்டவராகிய இயேசு இந்த பூவுலகிற்கு வந்தார். ஆனால், மனிதர்களோ, தங்களுக்கென்று பற்பல வழிகளை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். எங்கள் முன்னோர் இவ்வழியாகதான் சென்றார்கள் என்றும், எந்த வழிகளால் சென்றாலும், மோட்சம் செல்லலாம் என்று தங்களுக்குள்ளே நிச்சயித்துக் கொண்டு, தங்கள் கண்போல வழிகளிலே சென்று கொண்டிருக்கின்றார்கள். இப்படியும் வாழலாம் எப்படியும் வாழலாம் என்று வாசல்களை அகலமாக திறந்து விடுகின்றார்கள். அந்த வழிகள் அவர்களுடைய மனதிலுள்ள இச்சைகளை நிறைவேற்றுக் கொள்வதற்கும் இலகுவான பாதையாக இருக்கின்றது. உலகத்தின் போக்கிற்கும், உலக ஞானத்திற்கும் அவைகள் மிகவும் ஏற்புடையதாக இருக்கின்றது. அநேகரால் அது அங்கீகாரம் பெற்றிருக்கின்றது. எனவே, அந்த வழிகளை அநேகர் தங்களுக்கென்று தெரிந்து கொள்கின்றார்கள். அவைகள் மனிதர்களுக்கு செம்மையானவைகளாக தோன்றுகின்றது. அதன் முடிவோ அழிவு என்று வேதம் கூறுகின்றது. ஆனால், நித்திய வாழ்வுக்கு செல்லும் ஒரே ஒரு வழி உண்டு. இந்த மனிதகுலத்தை மீட்க வந்த ஆண்டவராகிய இயேசுவே அந்த வழியாக இருக்கின்றார். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று மீட்பராகிய இயேசு கூறியிருக்கின்றார். அவரையல்லாமல் மனித குலத்திற்கு இரட்சிப்பு இல்லை.

**யோவான் 14:6**

**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.**

**ஜெபம்:** பாதாளத்தின் வல்லடிக்கு என்னை தப்புவித்து காத்த தேவனே, நித்திய வாழ்விற்கு செல்லும் ஒரே வழியாகிய உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவை பற்றிக் கொண்டு வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – 1 யோவான் 5:5

# இலகுவாக தோன்றும் வழிகள்...

ஒரு கிராமத்திலே, பிள்ளைகள் கல்வி கற்பதற்கு தகுந்த பாடசாலையோ கல்வி முறையோ இல்லாதிருந்தால், அந்த ஊரின் மூப்பர் நலன் விரும்பிகள் யாவரும் இணைந்து, நாட்டின் அதிகாரிகளின் அனுசரணையோடு ஒரு நல்ல பாடசாலையை அமைத்து, பாலர் பாடசாலையிலிருந்து பாடங்களை ஒழுங்காக சிறப்பான முறையில் கற்றுக் கொடுத்தார்கள். மாணவர்கள் பாடங்களை உண்மையாகவே கற்றுக் கொண்டார்களா என்று உறுதி செய்ய, முன்குறித்த கால அட்டவணைகளின்படி பரீட்சைகள் நடத்தப்பட்டது. அந்த பரீட்சையின் சித்தி பெற்றவர்கள் தேச மட்டத்திலும் அங்கீகாரம் பெற்றிருந்தார்கள். ஆரம்பத்திலிருந்து, இது நன்மையான வழி என்று அறிந்திருந்தும், சிலர், இது கடும் போக்கான பாடசாலை, இங்கு படித்து யார் பட்டம் பெறுவான் என்று முறுமுறுத்து வந்தார்கள். நாட்கள் கடந்து சென்றதும், வியாபார நோக்கமுடைய சிலர், ஒன்று கூடி அந்த ஊரிலே இன்னுமொரு கல்வி நிலைத்தை ஸ்தாபித்தார்கள். அந்த ஸ்தாபனத்திலே கல்வி கற்பதற்கான அனுமதி ஒழுங்கு முறைகள் இலகுவாக்கப்பட்டது. மாதாந்தம் கட்டணங்களை ஒழுங்காக செலுத்துபவர்கள், கல்வி நிலையத்திற்கு ஒழுங்காக சமூகமளிக்கத் தவறினாறிலும் பெரிதான பிரச்சனைகள் ஏதுமில்லை. பரீட்சைகள் இலகுவாக்கப்பட்டது. அதிகபடியானோர் படித்து பட்டத்தை பெற்றுக் கொண்டார்கள். இடாம்பீகரமான பட்டமளிப்பு விழாவிலே, அழகான சான்றிகள் வழங்கப்பட்டது. அநேகர் அந்த கல்வி நிலையத்திற்கு செல்ல ஆரம்பித்தார்கள். ஏன், அங்கு யாவுமே அவர்களுக்கு இலவாக இருந்தது. ஆனால், அந்த கிரமாமத்தில் ஒழுங்காக இயங்கி வந்த பாடசாலையானது அவர்களுடைய பார்வைக்கு இடுக்கமான வழியாக இருந்தது. இலகுவாக படித்து பட்டம் எடுப்பது விசாலமான வழியாக இருந்தது. இந்த உலக போக்கின்படி வாழ விரும்புகின்றவர்கள் பொதுவாக இலகுவான வழிகளையே நாடித் தேடுவார்கள். தங்கள் விருபத்திற்கும் முற்போக்கான கொள்கைகளுக்கும் உடன்படாத வழியை, கடினமான வழி என்று தாங்களும் அந்த உண்மையான வழியிலே செல்வதை நிறுத்துவதுடன், அதிலே செல்பவர்களையும்எதிர்த்து நிற்கின்றார்கள். பிரியமான சகோதரசகோதரிகளே,நல்ல வழியை தேவனாகிய கர்த்தர் யாருக்கும் அடைத்து வைக்கவில்லை. அந்த விலை மதிக்க முடியாத பலனை தரும் அந்த வழிக்கு எந்த பணத்தையும் விலையும் போட்டதுமில்லை. நித்திய ஜீவனை தரும் அந்த ஒரே வழியையே நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

**அப்போஸ்தலர் 4:12**

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை

**ஜெபம்**: நித்திய ஜீவனை தரும் ஒரே வழியயை எனக்கு காண்பித்த தேவனே, அந்த வழியின் மேன்மையை நான் உணர்ந்து, அந்த வழியிலே நான் வாழும்படிக்கு எனக்கு ஞானமும் பெலனும் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | நவம்பர் 8

📖 மாலை வாசகம் – சங்கீதம் 18:19

# வாழ்வுக்குச் செல்லும் ஒரே வழி

தேவனாகிய கர்த்தர் பரலோகத்திற்கு செல்லும் வழியை இடுக்க மாக்கினாரோ? இல்லை. தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் *3:16*). ஆதியிலிருந்து, மனித குலத்தை பாதாளத்தின் வல்லடிக்கு உட்படுத்துவதே, பிசாசானவனுடைய நோக்கமாக இருக்கின்றது. தேவனாகிய கர்த்தர் விலக்கிய தீமையான கனியை அவன் நன்மை என்று ஏவாளுக்கு காண்பித்து, அவளை வஞ்சித்தான். அதுபோலவே, எப்போதும், அவன் அழிவின் வாசலை விரிவாக்கி, அந்ம வழியை நன்மையானதென்றும் விசாலமானதென்றும் காண்பிக்கின்றான். அந்த மாயைமான வழி, பார்வைக்கு இலகுவாகவும், வாழ்வதற்கு உல்லாசமாகவும் தென்படுவதால், அநேகர் அந்த கேட்டின் வழியை தெரிந்து கொள்கின்றார்கள். அந்த கேட்டின் வழியிலிருந்து, மனித குலத்தை மீட்க வேறெந்த வழியும் இல்லாதிருந்ததால், நம்மீது அன்புகூர்ந்த பிதாவாகிய தேவன்தாமே, பரலோகத்திற்கு செல்லும் ஒரே வழியை ஏற்படுத்தும்படிக்கு, தம்முடைய ஏக சுதன் என்றும் பாராமல், திருக்குமாரனாகிய இயேசுவை இந்த உலகிற்கு அனுப்பினார். மீட்பராகிய இயேசுதாமே, மனித குலத்தின்மேல் விழுந்த ஆக்கினைக்குரிய விலையை செலுத்தினார். எந்த மனிதனாலே, உலக செல்வத்தினாலே செய்ய முடியாதிருந்த கடினமாக பாதையை அவர் தெரிந்து கொண்டு, கல்வாரி மலையிலே தம்மை பலியாக ஒப்புக் கொடுத்தார். மீட்பராகி இயேசுதாமே, அந்த இடுக்கமான வழியை தெரிந்து கொண்மு, மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயம் கொண்டு, நாம் யாவரும் பிதாவாகிய தேவண்டைக்கு தைரியமாக சேரக்கூடிய சிலாக்கியத்தை உண்டு பண்ணினார். ஆனால், உலகமும், அதன் போக்கை ஆளும் பிசாசானவனும், ஆண்டவராகிய இயேசுவை பகைத்து, அவரை துன்பப்படுத்தியது போல, அந்த ஜீவனுள்ள வழியினூடாக செல்கின்றவர்களையும் பகைத்து துன்பப்படுத்துகின்றான். அதனால்,அந்த நல்ல வழியானது, உலகத்திற்கு இடுக்கமான வாசலாக இரு க்கின்றது. அந்த இடுக்கமாக தோன்றும் ஒரே வாசல் வழியாக உட்பிரவேசித்து, நெருக்கமாக தோன்றும் வழியை தெரிந்து கொள்கின்றவர்களை, தேவன்தாமே விசாலத்திலே கொண்டு வந்து விடுகின்றார்.

**2 பேதுரு 3:9**

**ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.**

**ஜெபம்:** பிதாவாகிய என் தேவனே, சத்துருவின் வஞ்சகமான திட்டத்திற்குள் நான் சிக்கிக் கொள்ளாதபடிக்கு, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வதற்காக உமக்கு நன்றி செலுத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எவரையும் புறம்பே தள்ளாதவர்!

இந்த உலகத்திலே மேன்மக்கள், கீழ்மக்கள், கல்விமான்கள், கல்லாத வர்கள், செல்வந்தர், ஏழைகள் என்ற பற்றபல பாகுபாடுகள் உண்டு. அதன்படையிலே பல்வேறுபட்ட குழுக்கள் இயங்கி வருகின்றன. சிறப்பு குடிமக்கள் மத்தியிலே சாதாரண மக்களுக்கு இடமில்லை. சில இட ங்களிலே, பாடசாலைகள், வேலை இடங்கள், குடியிருப்புகள், ஏன் சில ஆலயங்கள் கூட பிரத்தியேகமாக சில குழுக்களுக்கென்று இயங்கி வருகின்றதை செய்திகள் வாயிலாக அறிந்து கொள்கின்றோம். இவை யாவும் குறிப்பிட்ட தரா தரங்களின் அடிப்படையிலே வகு ப்படுகின்றது. ஆனால், பரலோகத்திற்கு செல்வத ற்கான வழி அப்படியாக அமைக்கபபடவில்லை. உயர்ந்தவன், தாழ்த வன், துன்மாரக்கன், சன்மர்க்கன் என்ற பாகுபாடு இல்லாமல், எத்தனை பேர், மனம்திரும்பி, ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பிதாவாகிய தேவனுடைய சித்ததிற்கு இடங்கொடுக்கி ன்றார்களோ, அத்தனை பேரும் பரலோகம் செல்லும் சிலாக்கியத்தை கொடுத்திருக்கின்றார். “துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல் லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார்.” (எசேக்கியல் 18:23). தம்மிடத்தில் வருகின்ற எவரையும் அவர் புறம்பே தள்ளுவதில்லை. வருதப்பட்டு பாரஞ் சுமக்கின்றவர்களே, நீங்கள் எல் லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவன் (மத்தேயு 11:28) என்று அழைப்பை யாவருக்கும் கொடு த்திருக்கின்றார். அவரிடத்தில் பட்சபாதம் இல்லை. “உலகத்தை ஆக்கி னைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத் திற்கு அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளா கத் தீர்க்கப்படான். விசுவசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமா ரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால் அவன் ஆக் கினத்தீர்ப்பகுட்பட்டாயிற்று. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனு ஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர் கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குத் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளி யைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியி னிடத்தில் வராதிருக்கிறான்.” (யோவான் 3:17-20). எனவே, நீங்கள் சோர்ந்து போகாமல் கிறிஸ்துவிலே நிலைத்திருங்கள்.

**ரோமர் 2:11**

**தேவனிடத்தில் பட்சபாதமி ல்லை.**

**ஜெபம்:** பட்சபாமில்லாமல் அவனவனுடைய கிரியைகளுக்கு தக்கதாக பலன் அளிக்கின்ற தேவனே, எனக்கு முன்பாக இருக்கும் இந்த அருமையான அழைப்பை நான் விட்டுவிடாதபடிக்கு என்னை கரம்பிடித்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | நவம்பர் 10

📖 மாலை வாசகம் – யோவான் 15:1 – 8

# பண்படுத்தப்பட்ட நிலம்...

நிலத்திலே முள்ளும் குருக்கும் களைகளும் முளைப்பதற்கு அந்த நிலமானது பண்படுத்தப்பட வேண்டியதில்லை. அவை முளைத்த பின்பு, எவரும் அதை பராமரிக்க வேண்டியதில்லை. அவைகள் பெருகி பரபி வளர்வதற்கு பொதுவாக எந்த முயற்சிகளையும் எவரும் எடுக்க வேண்டியதில்லை. இப்படிப்பட்ட நிலங்களை எவரும் தோட்டம் என்று அழைப்பதில்லை. ஒருவன் தான் விரும்பியத்தை, தான் விரும்பிய இடத்தில், தான் விரும்பிய நேரத்தில் தன் இஷ்டம் போல செய்கின்ற மனுஷக்கு இப்படிப்பட்ட முள்ளும் குருக்கும் களைகளும் விளைவிக்கும் நிலம் ஒத்திருக்கின்றது. முள்ளும் குருக்கும் களைகளும் எந்தப் பலனையும் கொடுப்பதில்லை. ஆனால், நல்ல நிலமானது பண்படுத்தப்பட்ட நிலமாக இருக்கின்றது. அந்த நிலத்தை பண்படுத்தும் தோட்டக்காரன், அங்கே முட்பூண்டுகளுக்கும், குருக்குக்கும், களைககளும் இடமில்லை. பறைகளும், சிறுகற்களும் அங்கிருந்து அகற்றப்படும். தேவ வசனமானது அங்கே கிரியை செய்வ தற்கேதுவாக, பண்படுத்தப்பட்ட இதருயமுள்ளவன், வசனத்தை கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நல்ல பலனை கொடுக்கின்றவனாகவும் இருப்பான். இந்த உலகத்தின் போக்கானது, முள்ளும் குருக்கும் களைகளும் முளைப்பதற்கு ஏதுவான இடமாக இருக்கின்றது. அவரவர் தான் விரும்பியதை செய்தவதற்கு தடையில்லை. ஆனால், தேவ சபையானது அப்படியாக இருக்க முடியாது. சில வேளைகளிலே சத்துருவானவன் மனுஷர் உறங்கும் போது, கோதுமைக்குள் களைகளை விதைதப் பதைப் போல விதைத்து விடுகின்றான். ஆனால் இன்று பட்டப் பகலிலே, மனுஷர்கள் முள்ளும் குருக்கும் களைகளும் முளைப்பதற்கு ஏதுவான இடமாக தேவ சபையை மாற்றிவிடுகின்றார்கள். ஜீவ வார்த்தைகளை விட்டுவிலகி, உலகத்கத்திற்கும் தேவ சபைக்கும் ஒரு பாளத்தை அமைத்து, உலக போக்கிலே வாழ்பவர்களுக்கு ஏற்றபடி சபையை மாற்றியமைத்து விடுகின்றார்கள். தாங்கள் பரந்த மனமுடையவர்கள் என்று வாசலை விவரிவாக்கி விடுகின்றார்கள். இப்படியான நடைமுறைகளினாலே, சபையிலே இருக்கும் சிலருடைய இருதயமானது தேவ வசனம் விழுந்து வளரும்படி பண்படுத்தப்படுவதில்லை. அதனால், அங்கே தேவன் விரும்பும் பலன்களை காண முடியவில்லை. நீங்களோ கர்த்தர் தமது மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்கள். எனவே எச்சரிக்கையுள்ளவர்காக இருங்கள்.

**ஏசாயா 61:3**

**அவர்கள்கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்.**

**ஜெபம்:** நல்ல கனிகளை கொடுக்கும்படி என்னை நீதியின் விருட்சமாக நாட்டிய தேவனே, நான் இந்த உலகத்தின் போக்கிற்கு உடன்பட்டு, என் மனக்கண்களை குருடுபடுத்திவிடாதபடிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | நவம்பர் 11 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 13:24 – 30

# வேறு பிரிந்த வாழ்க்கை

இந்த உலகமானது முள்ளும் குருக்கும் களைகளும் நிறைந்ததாக இருக்கின்றது. அவைகள் மத்தியிலே நாம் முற்றிலும் நற்கனிதரும் உய ர்குலத் திராட்சக் கொடியாக, திராட்சச் செடியாகிய இயேசு கிறிஸ்து விலேஒட்டப்படிட்டிருக்கின்றோம். கோணலும், மாறுபாடுமான இந்த உல க்திலே, சுடர்விட்டு பிரகாசிக்கும் ஒளியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின் றோம். இந்த உலக்திலிருந்து வேறு பிரிக்கப்பட்டிருக்கும். எனவே, நாம் வேறு பிரிந்த வாழ்க்கையை வாழ வேண்டும். "நீங்கள் இந்தப் பிரபஞ் சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரிய மும் பரிபூரணமுமான சித்தம் இன் னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக்குங்கள் என்று வேதம் கூறிகின்றது. நாம் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் வாழ்வது எப்படி? முள்ளும் குருக்கும் களை களும் வளர்வது போல நாம் எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்து விட முடியாது. வேறு பிரிந்த வாழ்க்கைக்கு ஒரு ஒழுங்கு முறை உண்டு. அந்த ஒழுங்குமுறையானது இயேசு கிறிஸ்துவினால் உண்டானது. நடை, உடை, அலங்காரம் யாவற்றிலும் பரிசுத்தம் உண்டு. பண்படுத் தப்பட்ட நிலம் போன்ற இருதயமுள்ளவர்கள், வேறு பிரிக்கபட்ட வாழ்க் கையை சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்கின்றார்கள். ஆனால், தேவனு டைய வார்த்தையைக் கேட்டும், உலக ஆசைகளை விட்டுவிட மனதில் லாதவர்கள், களைகளைப் போன்ற வாழ்க்கை வாழ விரும்புவதால், தேவ சபையிலே முறுமுறுப்போடு தேவ காரியங்களை செய்து, "என க்கு ஏன் இந்த வாழ்க்கை" என்று சலிப்போடும், கசப்போடும் வாழ்ந்து வருகின்றார்கள். ஒருவரும் கெட்டுப்போகமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பது பிதாவாகிய தேவனுடைய சித்தமாக இருக்கின்றது. அதனால், இந்த உலகம் முழுவதும் பண்பட்ட நிலமாக இருக்கின்றது என்பது பொருளல்ல. யாவரும் தங்கள் இருதயத்தைபண்படுத்த இடங் கொடுப்பார்கள் என்பதும் நிச்சயமல்ல. ஆதி சபையிலே, இரட்சிக்கப்ப டுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். இன்று தேவ வசனத்தை கேட்க மனதில்லாத வர்களையும், இரட்சிப்பைக் குறித்து உணர்வற்றவர்களையும் வாழ்பவர்களை வருந்தி யழைத்து சபையிலே சேர்த்து, அவர்களை ஆதரித்து வருவதால், அவர்கள் வழியாக சபையிலே பல வேண் டப்படாத விளைவுகளை ஏற்படுத்தி, சபைகளிலே தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவதற்கு ஏதுவான காரியங்கள் நடப்பதற்கு இடங் கொடுத்து விடுகின்றார்கள்.

**அப்போஸ்தலர் 2:47**

**இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபை யிலேசேர்த்துக்கொண்டு வந் தார்.**

**ஜெபம்**: அன்பும் பரிசுத்தமும் உள்ள தேவனே, உம்முடைய வார்த்தையி ன்படி நான் வேறு பிரிந்த வாழ்க்கை வாழும்படிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசு நாமம்!

ஒரு சமயம், ஆண்டவராகிய இயேசுவின் சீஷர்களாகிய பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள். அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷன் தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைகேட்கும்படி, அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே இருந்து, தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சை கேட்டான். அப்பொழுது பேதுரு: நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான் உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான் நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அக்காலத்திலிருந்த யூத மதத் தலைவர்களின் ஆலோசனைச் சங்கத்தார் இந்த நன்மையும், அதிசயமுமான செயலை கேள்விப்பட்ட போது, சந்தோஷமடைவடைவதற்கு பதிலாக, அவர்கள் கோபமடைந்தார்கள். மேலும், அவர்கள் பேதுருவையும் யோவனையும் கைது செய்தார்கள். பேதுரு அவர்கள் சங்கத்தின் முன்னிலையிலே நின்று: இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான். பேதுரு இயேசுவின் நாமத்தை அறிக்கையிட்டது அவர்களுக்கு மிகவும் இடறாலக இருந்தது. அதனால், அவர்களை நாவை எப்படி அடக்குவது என்று யோசனை பண்ணி, அவர்கள் துன்பப்படுத்த மனதாயிருந்தார்கள். மெசியா வெளிப்பட எதிர்பார்திருந்த அவர்களே, மெசியாவாகிய இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். அவரை பின்பற்றுகின்றவர்கள் துன்புறுத்தினார்கள். சிலர் இயேசுவின் இரத்தசாட்சியாக மரித்தார்கள். இவ்வண்ணமாகவே இன்றும் இயேசுவை பின்பற்றுவோருக்கு நிநதனைகள் போராட்டுங்கள், அவமானங்கள் உண்டு. அதனால் இந்த உலகத்திலே அந்த ஜீவ வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாக காணப்படுகின்றது. இந்த சத்தியத்தை அறிந்து உணர்ந்து அவரிலே நிலைத்திருக்க நமக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை அவர் கொடுத்திருக்கின்றார்.

**அப்போஸ்தலர் 4:12**

**நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை**

**ஜெபம்**: இடுக்கமான வாசலை கண்டு பிடிக்க்க உணர்வுள்ள இருதயத்தை தந்த தேவனே, அந்த ஜீவ வாசல் வழியாக பிரவேசித்து, முடிவுபரியந்தம் அந்த வழியிலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசு நிமித்தம் வரும் பாடுகள்

மலைப்பிரசங்கத்தின்ஆரம்பத்திலே,ஆண்டவராகிய இயேசுதாமே, “என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.” என்று கூறியிருக்கின்றதை நாம் இந்த ஆண்டிலே பெப்ரவரி மாதம் ஆறாம் திகதியில் ஆரம்பித்து சில நாட்களாக தியானித்து வந்தோம். இந்த உலகத்திலே நித்திய ஜீவனுக்கு போகின்ற ஒரே வாசல் வழியாக செல்பவர்கள் காரணமின்றி துன்புறுத்தப் பட்டு வருகின்றார்கள். “நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.” (எபிரெயர் 11:36-38). ஏன் அவர்கள் விருதாவாகவா இந்த உபத்திரவங்களையயெல்லாம் சகித்தார்களா? இதைக் குறித்து தேவ ஊழியராகிய பவுல் தாமே “எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.” என்று கூறியிருக்கின்றார். மேலும் அவர் மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்று உறுதியாய் அறிக்கை செய்தது போல, நாமும் அவருடைய அழைப்பை ஏற்று, அவர் வழியாக அவரோடு அவரில் உயர்விலும் தாழ்விலும் நிலைத்திருந்து முன்னேறிச் செல்வோமாக.

**ரோமர் 8:37**

**இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.**

**ஜெபம்:** இந்த உலகத்திலே உண்டாகும் உபத்திரவங்களை கண்டு சோர்ந்து பின்வாங்கிப் போய்விடாதபடிக்கு, கிறிஸ்துவிலே உம்மிலே நிலைத்திருந்து, மேன்மையானதைப் பற்றிக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "காரணமின்று பகைக்கின்றவர்கள்"

"என் சத்துருக்கள் வாழ்ந்து பலத்திருக்கினறார்கள். முகாந்திரமில்லாமல் என்னைப் பகைகின்றவர்கள் பெருகியிருக்கின்றார்கள்" என்று தேவ பக்தனாகிய தாவீது ராஜா, தன்னுடைய இக்கட்டான நிலைமையை, தான் நம்பியிருக்கும் தேவனாகிய கர்த்தருக்கு வெளிப்படுத்தும்படி, அதைகுறித்து சங்கீதமாக பாடியிருக்கின்றார். நம்முடைய கர்த்தரும் இர ட்சகருமாகிய இயேசுவுக்கும் அப்படியே செய்தார்கள். அவர் நன்மை செய்கின்றவராய் சுற்றித் திருந்தார். அவர் மனித குலத்தை பாவ சாபத்த லிருந்து மீட்கும்படி பரலோகத்திலிரு ந்து தம்மைத் தாழ்த்தி, இந்த உல கத்திற்கு வந்தார். ஆனால், அக்கா லாத்திலிருந்த அதிகாரிகளோ, முகா ந்திரமில்லாமல் அவரை பகைத்தார் கள். தங்கள் அநியாயத்தை நியாய மாக்கும்படிக்கு பொய்சாட்சிகளை பிணைத்தார்கள். அன்று மட்டுமல்ல, இன்றும் அநேகர் காரணமின்றி குற்றம் சாட்டப்படுகின்றார்கள். நன்மைக்கு கைமாறாக தீமையை பிணைக்கின்றார்கள். இத்தகைய செயல்கள் விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல, இந்த உலகத்திலே வாழும் அவிவாசிகளுக்கும் நடைபெற்று வருகின்றது. ஆனால், அவிசுவாசிகள் காரணமின்றி குற்றம் சாட்டப்படும் போது, அவர்களுடைய பதிலடிகள் வேறுபட்டவைகளாக இருக்கும். ஒருவேளை அவர்களுடைய பதிலடி கள், இந்த உலக நீதிக்கு ஏற்புடையதாக இருக்கலாம். அவைகள் மனிதர்கள் மத்தியிலே அங்கீகாரம் பெற்றவைகளாக இருக்கலாம். ஆனால், ஆண்டவர் இயேசுவின் சீஷர்கள் என்று அழைக்கப்படுகி ன்றவர்கள் அவ்விதமாக உலகத்தாரைப் போல பதிலடிகளை கொடுக்க முடியாது. எஜமானனாவன் எப்படியோ அவருடைய சீஷர்கள் அப்படியே என்ற பிரகாரம், நாம் இந்த உலகத்திற்கு சீஷர்கள் அல்ல, மாறாக நாம் நம்முடைய எஜமானானாகிய ஆண்டவர் இயேசுவின் சீஷர்கள். பாடுகள் உபத்தரவங்கள் மத்தியிலும் தேவ நீதியை நிறை வேற்றுகின்றவர்களாக வாழ வேண்டும். அந்த இடுக்கமான சூழ்நிலை மிகவும் கடினமானது. ஆனால், அப்படிப் பட்ட சூழ்நிலைகளை ஜெயம் கொள்ளும்படிக்கு தேவ ஆவியானவர்தாமே நமக்கு துணை நிற்கி ன்றார். அவரே நமக்கு பெலன் கொடுகின்றார். சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தை கொடு க்கின்றார். ஆதலால், நீங்கள் இடுக்கமான வாசலைவிட்டு விலகாமல் அதனூடாகச் செல்லுங்கள்.

**1 பேதுரு 3:17**

**தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.**

**ஜெபம்:** பரலோகத்திற்கு செல்லும் வழியை எனக்கு காட்டிய தேவனே, அந்த வழியிலே நான் பயணம் செய்யும்படிக்கு, எனக்கு வேண்டிய பெலனை தந்து என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வெளிவேடமான போதனைகள்

இன்று சிலருக்கு ஆண்டவர் இயேசுவைப் போல அற்புதங்கள் செய்ய விருப்பம் உண்டு ஆனால் அவைகளுக்கு ஒரு விலையை வைத்து பொருளாதார ஆதாயத்தை தேடுகின்றார்கள். ஆண்டவர் இயேசுவைப் போல பிரசங்கிக்க விருப்பம் ஆனால் அவர் கூறியவைகளை தங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்த விருப்பமில்லை. ஆண்டவர் இயேசுவைப் போல ஊர் ஊராக சென்று நற்செய்தியை அறிவிக்க ஆசை ஆனால், எளிமையான வாழ்க்கை வாழ விருப்பமில்லை. சிலர் ஆண்டவர் இயேசுவின் ஊழியர்கள், சீஷர்கள், விசுவாசிகள் என்று சொல்லிக் கொள்ள ஆசை ஆனால், அவருடைய வார்த்தையின்படி வாழ்வதைப் போல தங்களை காண்பித்துக் கொள்வார்கள். ஆனால், உண்மையிலேயே அவர்கள் சொல்லும், செயலும், சிந்தனையும் அவர்களுக்குள் வேறுபட்டதாக இருக்கும். இப்படிப்பட்டவர்கள் வெளிவேடமான வாழ்க்கை வாழ்கின்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் வெளி உலகத்திற்கு தங்களை பரிசுத்தவர்களாக காண்பித்துக் கொண்டு, இருதயத்திலே வேறு தனிப்பட்ட இலாபங்களுக்காக கிரியைகளை நடப்பிக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் வெளிப்படாமல் மறைந்திருப்பது ஒன்றுமில்லை என்ற பிரகாரமாக இவர்களுடைய வேஷங்கள் யாவும் களைந்து, இவர்கள் யார் என்று வெளிப்படும் நாட்கள் உண்டு. தோட்டத்திலுள்ள மரங்கள் செழித்து வளருமாபோல், இவர்கள் யாவரும் ஆண்டவருடைய திருநாமத்தை கூறிக் கொண்டு, பல்வேறு கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். தோட்டத்திலுள்ள மரங்கள் கனிகொடுக்கின்ற காலம் வரும் போது, அந்த மரங்களின் பிரயோஜனம் வெளிப்படுவது போல, இவர்களின் பலன்கள் இன்னவென்று அவர்கள் வாழ்விலே அவர்கள் வெளிக்காட்டும் கனிகள் உறுதிப்படுத்தும். எனவே கள்ளத் தீர்க்கதரிகளை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அதாவது, நீங்கள் காண்கின்ற யாவரும் கனி கொடுக்கும்வரை காத்திருப்பேன் என்று எல்லோரையும் சந்தேக கண்ணோடு பார்க்க வேண்டும் என்பது பொருளல்ல. மாறாக, ஊர் பேர், இடம், துறை தெரியாதவர்கள், கர்த்தரின் நாமத்தை சொல்லி கொண்டு,உங்களிடத்தில் வரும் போது, எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். அவர்களுடைய வாழ்க்கையின் பின்ணணியை அறிந்து செயற்படுங்கள்.தேவ ஆவியானவரின்வழிநடத்துதலுக்காகபொறுயோடு ஜெபம் செய்யுங்கள். அவர் உங்களை சகல சத்தியத்திலும் வழிநடத்துவார்.

**மத்தேயு 7:16**

அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?

**ஜெபம்**: சகல சத்தியத்திலும் என்னை வழிடத்தும் தேவனே, கோணலும் மாறுபாடுமான இந்த உலகத்திலே, கண்ணிகளில் சிக்கி வஞ்சிக்கப்பட்டு போகாதபடிக்கு, உம்முடைய வார்த்தையின் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அலைகிறவர்களாயிராமல்....

இந்நாட்களிலே, ஆண்டவராகிய தாமே, மலை பிரசங்கத்திலே, கள்ளத் தீர்க்கதரிகளைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படிக்கும், அவர் களை எப்படி இனங்கண்டு கொள்வதென்பதையும் குறித்து கூறிய வார் த்தைகளை தியானித்து வருகின்றோம். இன்ரநெற் சமூக ஊடகங்கள் மலிந்திருக்கும் இந்த காலத்தி லே, காரியத்தைக் குறித்து நாம் இன்னும் அதிக ஜாக்கி ரதையாக இருக்க வேண்டும். கள்ளத் தீர்க்கதரிசிகளை குறி த்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்என்று கூறும் போது, அப்படிப்பட்டவர்கள் உங்கள் வீட்டிற்கு, வேலை செய்யும் இடத்திற்கு, கல்வி நிலையங்களுக்கு, கடைத்தெருக்களுக்கு உங்களை பின்தொடர்ந்து வருகின்றார்கள் என் பது பொருளல்ல. பல சந்தர்ப்பங்களிலே விசுவாசிகளே அப்படிப்ப ட்டவர்களை அநாவசியமாக பின்தொடர்ந்து தேடிச் செல்கின்றார்கள். ஏன் அப்படிப்பட்ட மனநிலையானது சில விசுவாசிகள் மத்தியிலும் சில சபைகளிலும் ஏற்படுகின்றது? "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப் பட்டவர் களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொரு ட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போ ஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசே ஷகராக வும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்." என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இன்று கணிசமான விசுவாசிகள், தங் கள் சொந்த சபையின் மேய்ப்பர்கள், போதகர்களுக்கு செவி கொடுப்ப தைப் பார்க்கிலும், ஊரறியாதவர்களும், தங்களை தீர்க்கதரிகள், சுவி சேஷகர்கள் என்று காண்பித்து கொள்கின்றவர்களை பின்தொடர்ந்து அவர்களுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுப்பதற்கு முந்திக் கொள் கின்றார்கள். ஆண்டவர் இயேசு தாமே, தங்களைப்பற்றி கூறிய காரிய ங்களை தங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தாமல், யாராவது வந்து, பரபரப்பான காரியங்களை பேசி, அடையாளங்களையும், அற்பு தங்களை காண்பிப்பார்களா என்று தங்கள் மனதை அங்குமிங்குமாக அலைந்து திரிய வைக்கின்றார்கள். நீங்களோ தேவ வார்த்தையை நிலைத்திருங்கள். ஜெபத்திலே தரித்திருங்கள். சத்திய ஆவியானவர் உங்களை நடத்திச் செல்வார்.

**எபேசியர் 4:14**

**மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றி னாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,**

**ஜெபம்**: அன்பின் தேவனே, என்னைக் குறித்து நீர் கூறிய வார்த்தைகளை நான் அற்பமாக எண்ணி, மனத்திற்கு பிடித்த வார்த்தைகளுக்கு அலைந்து திரியாமல், சத்திய வார்த்தையிலே நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிருஷ்டிகரையே தொழுது கொள்ளுங்கள்

எசேக்கியேல் என்னும் தீர்க்கதரிசியின் நாட்களிலே, தேவ ஜனங்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் செய்கின்ற அருவருப்புக்களை, தேவனாகிய கர்த்தர்தாமே, தீர்க்கதரிசிக்கு காண்பித்தார். தேவனாகிய கர்த்தர் எசேக்கியேலை நோக்கி: மனுப்புத்திரனே, அவர்கள் செய்கிறதைக் காண்கிறாயா? என் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு என்னைத் தூரமாய்ப் போகப் பண்ணும்படியான தேவ ஜனங்கள் செய்கின்ற மிகுந்த அருவருப்புகளை காண்கின்றாய் அல்லவா? இன்னும் மிகுந்த அருவருப்புகளை காண்பிப்பேன் என்று கூறி, கர்த்தருடைய ஆலயத்தின் உட்பிரகாரத்திலே கொண்டு போனார்: இதோ, ஏறக்குறைய இருபத்தைந்து புருஷர், தங்கள் முதுகைத் கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்திசைக்கும், நேராகத் திருப்பினவர்களாய்க் கிழகே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள். இது தேவனுக்கு கொடிய அருவருபாக இருந்தது. இன்று, தங்களை தேவனுடைய சுவிசேஷகர்கள் என்று அழைக்கும் சிலர் நித்திய ஜீவனுக்கென்று கொடுக்கப்பட்ட வேத வார்த்தைகளை புரட்டி, அந்த அந்நிய திருவிழாவைக்களை, விசுவாசிகள் கொண்டாட வேண்டும் என்று போதித்து வருகின்றார்கள். தங்கள் மனதை அங்குமிங்குமாக அலையவிடுகின்ற விசுவாசிகள் வர்கள், இத்தகைய தவறான வார்த்தைகளை கேட்டு, இழுப்புண்டு போய், சபைகளுக்கு முன்பாக அந்த சூரிய நமஸ்கார திருவிழாவை கொண்டாடி வருகின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனைவிட்டு விலகிப்போகும் போதனைகளைக் குறித்து நீங்கள் மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். உங்கள் சுத்தமனசாட்சியானது சூடுண்டு போகாதபடிக்கு, மனிதர்களை நோக்கிப் பார்க்காமல், தேவனாகிய கர்த்தரை நோக்கி பாருங்கள். பொல்லாங்கான காரியங்களை மாத்திரமல்ல, பொல்லாங்காய் தோன்றுகின்றவைகளை விட்டுவிலகுங்கள். நீங்கள் விட்டு வந்த அருவருப்புக்களை மறுபடியும் பற்றிக் கொள்ளாதபடி விழிப்புள்ளவர்களாக இருங்கள்.

வேதப்புரட்டர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அனுதினமும் வேதத்தை கருத்துடன் வாசித்து, ஊக்கத்துடன் ஜெபியுங்கள். கிறிஸ்துவின் சாயலில் வளர்வதையே கருத்தில் கொள்ளுங்கள். வீண் தர்க்கங்களுக்கு விலகி, உங்கள் உள்ளான மனிதனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுவதாக.

**ரோமர் 1:25**

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய் யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்,

**ஜெபம்**: பரிசுத்தத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, நீர் எனக்கு தந்த சுத்த மனசாட்சியானது சூடுண்டு போகாமல், உணர்வுள்ளதாக இருக்கும்படிக்கு நான் உணர்வுள்ள வாழ்க்கை வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தந்திரமான உபதேசங்கள்

மனிதர்கள் தாங்கள் வாழும் வீட்டையும், வீட்டிலுள்ள பொக்கிஷங்களையும் கள்ளர்கள் கன்னமிட்டு திருடாதபடிக்கு பல முன்னேற்பாடுகளை செய்து கொள்கின்றார்கள். இந்த உலகமும் அதிலுள்ள பொக்கிஷங்களும் அநித்தியமானது என்று அறிந்திருந்தும், தாங்கள் வாழும்வரைக்கும் அவைகளை கருத்தோ பாதுகாத்துக் கொள்கின்றார்கள். அதைவிட மேலானதும், அழியாததும், நித்திய வாழ்வுக்கு அழைத்து செல்லும் இரட்சிப்பை நாம் எவ்வளவு அதிகமாக திருடர்களிடமிருந்து இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். யார் இந்த திருடர்கள்? கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதர்கள் இருப்பார்கள்: அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்களைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களை கிரயத்துக்கு கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்: அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும் என்று பேதுரு எழுதிய இரண்டாம் நிருபத்தில் இரண்டாம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். முதலாவதாக, இவர்கள் தங்களை தீர்க்கதரிசிகள் அல்லது போதகர்கள் என்று அழைத்துக் கொள்வார்கள். இரண்டாவதாக, இவர்கள் வஞ்சகத்திற்கேதுவான உபதேசங்களை, ஏதேனில் இவர்களுடைய தலைவனாகிய பிசாசானவன் எப்படி ஏவாளை வஞ்சித்தானோ, அப்படியே, இவர்களும், கேட்டுக்கேதுவானவைகளை இச்சிக்கத்தக்கதாகவும், மனிதர்களுடைய பார்வையிலே யதார்த்தமுள்ளதாகவும் காண்பித்துக் கொள்வார்கள். மூன்றவதாக, இது கேட்டுக் செல்லும் வாசலாக இருப்பதால், இவர்களை அநேகர் பின்பற்றுவார்கள். அக்காலத்திலே ஆண்டவராகிய இயேசுவின் பிரதான சீஷனாகிய பேதுரு தாமே, இப்படிப்பட்டவர்களின் முதலாவது ஆயுதம் என்னவென்று தெளிவாக கூறியிருக்கின்றார். இவர்கள், பொருளாசையுடையவர்களாய், தந்திரமாக வார்த்தைகளால் உங்களை தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்வார்கள். செழிப்பின் உபதேசம் இவர்களின் அடிப்படை உபதேசமாக இருக்கும். எனவே, இவர்களின் வஞ்சக வார்த்தைகளுக்கு இழுப்புண்டு போய்விடாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

**2 பேதுரு 2:1**

**கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்;**

**ஜெபம்:** அழியாமையை தரித்துக் கொள்ளும்படி என்னை அழைத்த தேவனே, அழிந்து போகின்றவைகளை உபதேசமாக கொண்டிருப்பவர்களை நான் நாடிச் செல்லாதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேலானவைகளையே நாடித் தேடுங்கள்

நித்திய ஜீவனை கொடுக்கும் நற்செய்தியை ஆதாயத் தொழிலாக தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் கொண்டிருக்கின்றவர்களுக்கு, பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது. எனவே, தேவனுக்கு ஊழியம் செய் கின்றோம் என்று ஆரம்பித்து, தங்கள் தேவைகளுக்கு மேலாக, இடாம் பிகரமாக மாளிகைகளை தங்களு க்கு கட்டிக் கொண்டு, நிலங்களை தங்கள் முதலீடாக வைத்துக் கொண்டு, விலையுயர்ந்து வாகன ங்களையும், உலக பொருட்களை யும்தங்களுக்கென்றுசேர்த்துவைக் கின்றவர்களுடைய வாழ்க்கை முறையைகுறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். பிரியமா னவ ர்களே, “நீங்கள் கிறிஸ்துவுடனே எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவ னுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் மேலானவைகளைத் தேடு ங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்ப டுவீர்கள். ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையாகிய பொருளாசை ஆகிய இவைகளை பூமியில் உண்டு பண்ணுகின்ற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும் என்று கொலோசேயர் மூன்றாம் அதிகாரதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. “பூமியிலுள்ளவைகளையல்ல, மேலான வைகளையே நாடுங்கள்” தேவனுக்கும் உலக பொருளுக்கும் உங் களால் ஊழியம் செய்ய கூடாது. பரலோகத்திலே உங்கள் பொக்கி ஷங்களை சேர்த்து வையுங்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கின்றது” “உங்களிடம் உள்ளதை விற்று பிச்சை கொடு ங்கள்” ஐசுவரியவான் பரலோகத்தில பிரவேசிப்பது அரிதென்று மெய் யாகவே உங்களுக்குச் சொல்கின்றேன்” என்ற வேத வார்த்தைகளை அறிந்திருந்தும், உலக ஐசுவரியத்திற்குள் இருந்து, சுக போகமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, அதை நாடடிச் செல்லும்படி உங்களுக்கு உபதேசிக்கும் போதனைகளைக் குறித்து நீங்கள் மிகவும் எச்சரிக்கையு ள்ளவர்களாய் இருங்கள். நீங்கள் பெற்றுக் கொண்ட விலை மதிக்க முடியாத இரட்சிப்பை காத்துக் கொள்ளுங்கள்.

**கொலோசெயர் 3:2**

**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங் கள்.**

**ஜெபம்:** உன்னத்திலுள்ள மேலானவைகள் தேடுங்கள் என்று சொன்ன தேவனே, இந்த உலகத்திலுள்ள ஐசுவரியத்தின் மேல் என் கண்களை பதிய வைக்கும் போதனைகளிலிருந்து என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இடுக்கமானவழியை விசாலமாக்குகின்றவர்கள்

“இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.’’

**வெளி 3:8**

**உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே,**

ஏன்ற வார்த்தைகளை குறித்து கடந்த கிழமைகளிலே தியானித்தோம். இந்த வார்த்தைகளை நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறிய பின்பு, அடுத்ததாக எந்த வார்த்தையை கூறியிருக்கின்றார் என்பதை கவனித்துப் பார்த்தீர்களா? நித்திய ஜீவனை கொடுக்கும் இடுக்கமான வாசலை பற்றி கூறிய பின்பு, கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் என்று கூறியிருக்கின்றார். ஏனெனில், போலியான தீர்க்கதரிகள், கள்ளப் போதனைகளை செய்கின்றவர்கள், ஆண்டவர் இயேசு இந்த உலகத்திற்கு வந்து பரலோகம் சென்றதிலிருந்து, கூறப்படாததும், மனிதர்கள் மனதை கவர்ந்து கொள்ளும், புதிய வேதப்புரட்டான வெளிப்பாடுகளையும், இலகுவான வழிகளையும் குறித்து இனிமையாக பேசுவார்கள். பிசாசானவன், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை சோதித்த போது, வேத வார் த்தைகளை குறிப்பிட்ட பிரகாரமாக, இவர்களும் வேத வார்த்தைகளை தவறான நோக்கத்துடன் சுட்டிக் காட்டுவார்கள். இடுக்கமென்று ஆண்டவர் இயேசு கூறிய வாசலை, இவர்கள் விசாலமாக்கி அநேகரை தங் கள் வசமாக இழுத்துக் கொள்கின்றார்கள். வேதத்தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்ததிலே மூன்றாம் அதிகாரத்திலே கூறப்பட்ட லவோதிக்கேயா சபையைப் போல, “நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறாய்’’ என்ற பிரகாரம் இந்த உலத்தின் செல்வ செழிப்புக்களை தேவ ஆசீர்வாதத்தின் அளவுகோலாய் வைத்திருப்பார்கள். பிரியமானவர்களே, நீங்களோ போலியான போதனைகளுக்கு இடங் கொடாமல், தேவனுக்கு பிரியமான பிலதெல்பியா சபையோரைப் போல, கொடுக்கப்பட்ட பொறுப்பிலே உண்மையாயிருங்கள். இயேசுவின் நாமத்தை அறிக்கையிட்டு, அவருடைய நல் சாட்சிகளாக வாழுங்கள். அவர் யாவையும் நிறைவாக்கி உங்களை நடத்திச் செல்வார்.

**ஜெபம்**: பரலோக தேவனே, சீர்கேடும் பிரயோஜனமுமற்ற பேச்சுமாயிருக்கிற விதண்டாவாதங்களுக்கு விலகி, தேவபக்திக்கேதுவானவைகளை பின்பற்றி, கிறிஸ்துவின் சாயலிலே வளர எனக்கு கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கனிகளை அவதானித்துப் பாருங்கள்

அக்காலத்திலே தேசங்களிலே சாஸ்திரிகள், ஜோசியர்கள், அஞ்சன க்காரர், சூனியக்கார்கள், மந்திரவாதிகள் இருந்தார்கள். சில சமயங்க ளிலே இவர்கள் தேசத்தின் ராஜாவினால் அழைக்கப்படுவார்கள். இவர் கள் இனி நடக்கவிருக்கும் சில காரியங்களை குறிசொல்கின்ற ஆவி யினாலே சொல்லி வந்தார்கள். மோசேயின் நாட்களிலே, அவன் எகிப் தின் ராஜாவாகிய பார்வோன் முன்னி லையிலே, தேவ வழிநடத்துதலினா லே, அதிசயிக்கத்தக்க அற்புத அடை யாளங்களைசெய்தான். அந்த வேளை யிலே, பார்வோன் தன்னுடைய சாஸ் திரிகளையும், சூனியக்காரரையும், தன் தேசத்திலிருந்த மந்திரவாதிகளும் அழைப்பித்தான். அவர்கள் தங்கள் மந்திரவித்தையினால் மோசே செய்த சில அற்புதங்களை செய் தார்கள். தேவ ஊழியராகிய பவுலின் நாட்களிலே, குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்ப ட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். தேவ ஊழி யரோ இயேசுவின் நாமத்திலே அந்த ஆவியை அதட்டி அவளைவிட்டு அகன்று போகும்படி கட்டளையிட்டார். இன்றைய நாட்களிலும், குறி சொல்கின்ற ஆவியையுடையவர்கள் இருக்கின்றார்கள். நாம் ஆராதி க்கின்ற தேவனாகிய கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர், அவராலே செய்ய முடியாத காரியங்கள் ஒன்றுமில்லை. அந்த சத்தியத்திலே எந்த மாற்றமுமில்லை. அப்படியிருந்தும், அவர் ஏன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார்? அவர் வழியாக தம்மையும், தம்முடைய அன்பையும் வெளிப்படுத்தி, நமக்கு இரட் சிப்பின் வழியை உண்டுபண்ணி, நாம் இந்த உலகத்திலே எப்படி வாழ வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார். அவரிலே நிலைகொண்டவ ர்கள் தேவன் விரும்புகள் கனிகளை தங்கள் வாழ்க்கையிலே வெளிப்ப டுத்துவார்கள். மற்றவர்கள் அதைக் கண்டு சாட்சி சொல்வார்கள். எனவே, கள்ளத் தீர்க்கதரிசிகளையும் போலியான போதனை செய்கின்ற வர்களையும், அவர்களிடமிருக்கும் செல்வத்தினாலே, பொருட்களினா லோ, அவர்கள் பின் செல்லும் ஜனத் திரளினாலோ அல்லது அவர்க ளுடைய வரங்களினாலே அறிந்து கொள்ளாமல், மாறாக, தங்கள் நாளாந்த வாழ்வில் காண்பிக்கும் கனிகளினாலே அறிந்து கொள்ளு ங்கள்.

**மத்தேயு 7:20**

**ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.**

**ஜெபம்:** என்மீது அன்பு கூர்ந்து என் தேவனே, மெய்யான ஞானத்தின் ஆவியை எனக்கு தந்து, உம்முடைய வார்த்தைகளை அறிந்து கொள்ள வும், அவைகளை கைக்கொள்ளவும் எனக்கு பெலன் தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

# தேவனுக்கு பிரியமான வாழ்வு

இந்த உலகத்தின் அளவுகோலின்படி கல்வி கற்றவரும், ஆஸ்திகளுடையவருமாகிய மனுஷன் ஒருவர், தம் இளமைக் காலத்திலே, தன் வாழ்வை கர்த்தருக்கென்று அர்பணித்து, தன்னிடமிருந்தவைகளை தேவ ஊழியத்திற்கு கொடுத்து, தனித்திருந்து, மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து, சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தேவனுக்கென்று ஊழியம் செய்து வந்தார். அவர் தன் ஊழியத்தின் கடைசி காலங்களிலே, உண்மையான ஊழியர்கள் எப்படி அறிந்து கொள்வது என்பதைக் குறித்து போதித்தார். வழிதப்பிப் போகும் ஊழியர்களை குறித்து கூறும் போது, ஒரு சபை யின் விசுவாசிகளின் சராசரி வாழ்வைவிட மிக அதிகமாக, அந்த சபையின் ஊழியனின், வாழ்கை முறையானது, சுகபோகமாக இருந்தால், அந்த ஊழியனைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள் என்று தம்முடைய ஊழியத்தின் அனுபவத்தின் கருத்தைக் கூறினார். அதவாது, ஒரு சபையானது செல்வந்தர்களால் நிறைந்திருந்தார், அந்த சபையின் ஊழியர் செல்வந்தர்களை போல வாழலாம் என்று அவர் கூறவில்லை. மாறாக, தேவனுடையவர்கள் சுபாவமாகவே எளிமையான வாழ்க்கை தெரிந்து கொள்கின்றார்கள். போதுமென்கிற மனதை உடையவர்களாக இருப்பார்கள். தங்களிடம் மிமையாக இருப்பதை தங்களுக்கென்று சேர்த்து வைக்காமலும், சுய நலத்திற்காக பயன்படுத்தாலும், ஏழை எளியவர்களுக்கு மனதார கொடுத்து விடுகின்றார்கள். “ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும். மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக என்று தேவ ஊழியராகிய பவுல் 2 கொரிந்தியர் 8ம் அதிகாரத்திலே கொடுப்பதைக் குறித்து அழகாக வெளிப்படுத்தியிருக்கின்றார். எனவே, இவைகளை குறித்து நீங்கள் ஜெபிக்கும்போது தியானம் செய்யுங்கள். சத்திய ஆவியானர்தாமே உங்களை சகல சத்தியத்திலும் வழி நடத்திச் செல்வாராக.

**2 கொரிந்தியர் 8:11**

**கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக**

**ஜெபம்**: அன்பின் தேவனே, நான் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று சுய நலமான வாழ்க்கை வாழாமல் கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்தவனாக வாழும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்துவழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிதாவானவர் விரும்பும் கிரியைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஒரு வியாபாரிக்கு இரண்டு குமார்கள் இருந்தார்கள். அந்த முதலாளியானவன், எந்த பட்சபாதமுமில்லாமல், இரு வரையும் வியார அலுவல்களை கவனித்து வரும்படி, அவனவனுக்கு சில வேலைகளை பகிர்ந்து கொடுத்து வந்தான். மூத்த குமாரனோ, தன் தகப்பனானவர், தனக்கு கூறியதை செய்து முடிப்பதில் மிகவும் கருத்துள்ளனாக இருந்து வந்தான். தகப்பனானவர்தனக்கு கொடுத்ததை அவர் கூறிய பிரகாரமாக செய்து முடிக்கும் வரைக்கும், மற்றய அலுவல்களில் தன் நேரத்தை விரயப்படுத்தாதபடிக்கு கவனமுள்ளவனாக இருந்தான். இளையவனோ, சில வேளைகளிலே, தன் தகப்பனானவர் செய்து முடிக்கும்படி கூறிய சில வேலைகளை அப்படியே விட்டுவிட்டு, வியாபாரத்திலே தனக்கு பிடித்ததும், தனக்கடுத்தமுமான அலுவல்களை செய்து முடிப்பதில் ஆசையுள்ளவனாக இருந்தான். நாட்கள் கடந்து சென்ற பின்பு, தகப்பனானவர், தன்னுடைய குமார்களுக்கு கொடுத்த பொறுப்புக்களை ஆராய்து பார்த்த போது, இளைவனுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகள் அரைகுறையாக செய்து முடித்திருப்பதை கண்டு, அவனை அழைத்து, அவனுக்கு ஆலோசனை கூறினார். அவனோ, தகப்பனானவர் கூறியவைகளை கேட்க மனதில்லாதவனாய், இது யுகம், நவீன உலகம், காரியங்களை இப்படித்தான் நடத்தப்பட வேண்டும் என்று தன் தகப்பனானவருக்கு ஆலோசனை கூறிவிட்டு தன் வழியே சென்று விட்டான். இவர்களில், எவனைக்கு குறித்து தப்பனானவர் சந்தோஷமடைவார்? தன்னுடைய சொல்லைக் கேட்டு, அதன்படி காரியங்களை செய்கின்ற மூத்த குமாரனிடத்திலே பிரியமாக இருப்பரல்லவா! நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்ற அருமையான சகோதர சகோதரிகளே, இன்றைய நாட்களிலே, அநேகர் அந்த இளைய குமாரனுக்கு ஒப்பாக இருக்கின்றார்கள். ஆண்டவர் இயேசுக்கு ஆலோசனை கூறுபவர்களைப் போல நடந்து கொள்கின்றார்கள். பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தங்கள் வாழ்வில் நிறைவேற்ற மனதில்லாமல், தங்களுக்கு பிடித்த பற்பல காரியங்களிலே தங்களுக்கு கொடுப்பபட்ட தலாந்துகளையும், நேரங்களையும் விரயப்படுத்தி வருகின்றார்கள். நீங்களோ உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொண்டு, எதற்காக அழைக்கப்பட்டீர்களோ, அதை அடையும்படி விசுவாசத்திலே நல்ல போராட்டத்தை போராடுங்கள். நித்திய ஜீவனை பற்றிக் கொள்ளுங்கள்.

**மத்தேயு 7:21**

**பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல்,**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, நித்தியஜீவனைப் பற்றிக் கொள்ளுக்படிக்கு உணர்வுள்ள இருயத்தை தந்து எங்ளை வழிடநத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மெய்யான தேவ ஊழியர்கள்

தேவனாகிய கர்த்தருடைய மெய்யான தீர்க்கதரிகள் அன்று இருந்தார்கள். அதுபோலவே இன்றும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். மெய்யாக தேவனை பின்பற்றிகின்ற தேவ ஊழியர்கள், தேவனுடைய கிரியைகளை இந்த உலகிலே நடப்பித்து வருகின்றார்கள். ஆண்டவராகிய இயேசுவின் நாமத்திலே பிசாசுகளை துரத்துகின்றார்கள், அநேக அற்புதங்களை செய்து வருகின்றார்கள். அதே வேளையிலே, தாங்களும் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்ற பிதாவாகிய தேவனுடைய அநாதி தீர்மானத்தை தங்கள் வாழ்விலே உறுதியாய் பற்றிக் கொண்டு, ஆண்டவர் இயேசுவுக்காக இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டு, அவைகளை குப்பையுமாக எண்ணுகிக் கொள்கின்றார்கள். தங்கள் பேச்சிலே மாத்திரமல்ல, இவர்களுடைய வாழ்க்கையின் கனிகளின் வழியாக இவர்கள தேவ ஊழியர்கள் என்று மற்றவர் பிதாவாகிய தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தின்றார்கள். ஆனால், பக்க வழியாக புகுந்த சிலர், சுய இலாபத்திற்காக தங்களை தாங்களே தீர்க்கதரிசிகளாக ஏற்படுத்திக் கொண்டு, உலக நட்சத்திரங்களைப் போல தங்களை காண்பித்துக் கொண்டு, ஆண்டவர் இயேசுவின் நாமத்தை வீணிலே வழங்கி வருகின்றார்கள். வேறு சிலர், நன்றாக ஆரம்பித்து, பாதி வழியிலே, தவறாக உபதேசங்களுக்கு இடங்கொடுத்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், தங்கள் கிரியைகளினாலே, தங்களை பரிசுத்தவான்கள் என்று காண்பித்துக் கொள்கின்றார்கள். அநேகர் இவர்களுடைய வஞ்சிக்கும் உபதேசத்திற்கு செவிசாய்த்து, விசுவாசத்தைவிட்டு வழுவிப்போய்விடகின்றார்கள். இறுதி நாளிலே, இப்படியாக பின்வாங்கிப் போனவர்களை நோக்கி: நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை் அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஆனால், அவருடைய மெய்யான ஊழியர்களை தம்மிடம் சேரத்துக் கொள்வார். இவர்கள் தங்கள் கிரியைகளுக்குரிய பலனை அடைந்து ஆண்டவரோடு என்றும் சுகித்திருப்பார்கள்.

**மத்தேயு 7:21**

**என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.**

**ஜெபம்**: பரலோக தேவனே, நான் என் அழைப்பின் நோக்கத்தை பாதிவழியிலே மறந்து, இந்த உலக சுக போகங்களுக்கு என் மனதை சாய்த்து கொள்ளாமல், உம்மை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சோர்ந்து போக நற்கிரியைகள்

நாம் நம்முடைய நற்கிரியைகளினாலேயல்ல, தேவ கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டடோம். இது தேவனுடைய ஈவு. இதிலே எந்த மாற்றுக் கருத்துமல்ல. ஆனால், இந்த வார்த்தையை தவறாக புரிந்து கொண்ட சிலர், கிரியைகள் அவசியமல்ல, அற்புத அடையாளங்கள் அவசியமல்ல, என்று பிரசங்கித்து வருவதால், தேவ பிள்ளைகள், இந்த உலகத்தின் பிள்ளைகளைப் போல மாறிவிடுகின்றார்கள். தங்கள் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் சிலர், தேவனுடைய உண்மையான சுவிசேஷர்களையும், தீர்க்கதரிசிகளையும் அற்பாக எண்ணி, “பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.” என்று ஆண்டவராகிய இயேசு கூறிய வார்த்தைகளை சுட்டிக் காட்டி தங்கள் சுய இஷ்டமான வாழ்க்கையை தெரிந்து கொள்கின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய ஆண்டவராகிய இயேசு எதற்காக இந்த வார்த்தைகளை கூறினார்? கள்ள தீர்க்கதரிகளுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அதைக் கூறினார். அதனால், கர்த்தருடைய மெய்யான தீர்க்கதரிகள் இந்த உலகத்திலே இல்லை என்பது பொருளல்ல. தேவனுடைய மெய்யான தீர்க்கதரிசகளை அற்பமாக எண்ணி அவர்களை தள்ளிவிடுபவர்கள், வஞ்சிக்கப்பட்டுப் போகின்றவர்களாக காணப்படுகின்றார்கள். தேவனகிய கர்த்தர் யாருக்கு நத்திய ஜீவனை அளிக்கின்றார்? “தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.” என்று ரோமர் 2ம் அதிகாரம் 6ம் 7ம் வசனங்களிலே வாசிக்கின்றோம்.

**ரோமர் 2:7**

**சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தகப்பனே, நான் சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்யும்படிக்கு, செய்கையையும் விருப்பத்தையும் என்னில் நீர் ஏற்படுத்தி, கிருபையை பொழிந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | நவம்பர் 26

📖 மாலை வாசகம் – மத்தேயு 10:1

# அற்புத அடையாளங்கள்!

*நற்கிரியைகள் அவசியமல்ல என்று தேவன் அவர்களுக்கு கொடுத்த கிருபையை விரயமாக்குகின் றவர்களைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர் களாக இருங்கள். தேவனுடைய கிருபையை பெறுவதற்கு எவரும் பாத்திரரல்ல. ஆனால் அவருடைய கிருபையில்லாமல் தேவன் விரு ம்பும் கிரியைகளை நடபிக்க முடியாது என்பதை அறிந்த தேவன், அதை பூரணமாக தம்முடைய பிள் ளைகள் மேல் பொழிகின்றார். ஏன் அதைப் பொழிகின்றார், பெலவீனர்க ளாகிய நம்மால் நடப்பிக்க முடியாத பலத்த கிரியைகளை நடப்பிக்கும்படி, அவர் கிருபையை தினமும் பொழி கின்றார். ஆண்டவராகிய இயேசு தாமே, பரலோகத்திற்கு எழுந்தருள முன்னதாக, தம்முடைய சீஷர்களை நோக்கி: "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவா சமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசு வாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கி றவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசா சுகளைத் துரத்துவார்கள் நவமான பாஷைகளைப் பேசுவார்கள் சர்ப்ப ங்களை எடுப்பார்கள் சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அதுஅவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர்மேல் கைகளை வைப் பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்வி தமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்து க்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர் கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர் களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடை யாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்." இந்த ஜீவ வார்த்தைகளை நாம் மாற்கு கடைசி அதிகாரமாகிய 16ம் அதிகார த்திலே, 15ம் வசனத்திலிருந்து 20ம் வசனங்கள் வரை வாசிக்கலாம். ஆனால், தேவ பிள்ளைகள் சிலவேளைகளிலே இந்த அடையாள ங்களோடு நின்றுவிடுகின்றார்கள். அவர் வாழ்க்கையின் கிரியைகளிலே தேவன் எதிர்பார்க்கும் கனிகளை காண்பது மிகவும் அரிதான காரியமாக இருக்கின்றது. ஒருவன் எத்தனை அடையாளங்களை கண்டும், நடப் பித்தும், கிறிஸ்துவின் சாயலில் தினமும் வளர்ந்து பெருகாவிட்டால் அடையாளங்களினால் அவன் ஆத்துமாவுக்கு பலன் என்ன?*

**மாற்கு 16:17**

**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;**

**ஜெபம்:** பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படியாய் வரங்களை கொடுத்த தேவன், சீர்பொருந்துதலின் கனிகள் என் வாழ்வில் வெளிப்பட எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முடியாதவைகளை செய்து முடிக்கும்படி...

அநேக ஆண்டு காலமாக நான் வாழ்ந்து வருகின்றேன். உடன் பிறந்த சொந்த சகோதரனையே அன்பு செய்ய முடியாமல் இருக்கின்றது. நீங்கள் என்ன உன் பகைவனை அன்பு செய்ய என்று கூறிகின்றீர்கள். இது எப்படி சாத்தியமாகும்? இது என்னால் முடியாத காரியம் என்று ஒரு வயதான ஐயா கூறிக் கொண்டார். இது மிகவும் உண்மையான கருத்து. மனிதனுடைய பெலனால் ஒன்றும் கூடாது. முதல் பெற்றோ ராகிய ஆதாம் ஏவாளுடைய, முதல் குமாரனாகிய காயீன், தன் சகோதரன் கொடுத்த காணிக்கை யை தேவனாகிய கர்த்தர் ஏற்றுக் கொண்டு, தன்னுடைய காணிக்கை யின் மேல் பிரியமாய் இருக்கவில் லை என்பதற்காக, தன் இளைய சகோதரனாகிய ஆபேலை கொலை செய்து விட்டான். அன்றுமட் டுமல்ல, இன்றும் இப்பப்பபட்ட எண்ணம் மனிதர்களின் உள்ளங்களிலே கிரியை செய்து வருக்கின்றது. உலகதிலுள்ள சட்டங்களினால் உடனடியாக தண்டனை வரும் என்பறகாக சிலர் பொறுமையயை காத்துக் கொள்கின்றார்கள். தேவன் கூறும் அன்பு, அது நம்முடைய வாழ்விலே வெளிப்படும் கனியாக இருக்கின்றது. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படிக்கு தேவனாகிய கர்த்தர்தாமே வரங்களை கொடுத்திக்கின்றார். அந்த வரங்கள் வெற்றி வாழ்விற்கு அசியமானது. ஆனால், அந்த வரங்களினால், விசுவாசிகளின் வாழ்க்கையிலே சீர்பொருந்துதல் உருவாக வேண்டும். அப்படி உருவாகும் போது, அந்த மாற்றங்கள் வாழ்வின் நற்கிரியைகளாகிய கனிகளினாலே உறுதி செய்யப்படும். சொந்த சகோதனை உண்மையாக நேசிப்பதற்கும், பகைவர்களை அன்பு செய்வதற்கும், தேவ கிருபை வேண்டும். நாம் செய்ய முடியாத காரியங்களை செய்து முடிக்கும்படிக்கே, தேவ கிருபை கொடுக்கப்பட்டிருக்கின்றது. எல்லாம் கிருபையே என்று கனியற்ற வாழ்க்கை வாழ்பவன் தனக்கு கிடைத்த தேவ கிருபையை போக்கடிக்கின்றார்கள். தன் வாழ்விலே அந்தகார கிரியைகளிலிருந்து விடுதலை பெறாமல், தேவ கிருபையினாலே இரட்சிக்கப்பட்டேன் என்று ஒருவன் எப்படி கூற முடியும்? நாம் பாவத்திலே நிலைத்திருந்து கொண்டு, அதைவிட்டுவிட மனதில்லாமல், தேவ கிருபை என்னை குணப்படுத்தும் என்று கூறுவது மதியீனமாக இருக்கும். நீங்களோ, மெய்யான திராட்சை செடியாகிய இயேசு கிறிஸ்துவிலே நிலை த்திருந்து, தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பியுங்கள்.

**பிலிப்பியர் 4:13**

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லா வற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

**ஜெபம்**: கனி கொடுக்கும்படி என்னை ஏற்படுத்திய தேவனே, உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவில் நிலைத்திருந்து, நீர் விரும்பும் கனிகளை கொடுக்க உம்முடைய கிருபையினாலே என்னை பெலப்படுத்தி வழிநடத் திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கே கனி கொடுப்பது?

தேவனுடையவர்கள் என்று தங்களை கூறிக் கொள்கின்றவர்களை நாம் அவர்களுடைய பேச்சினாலயோ, வரங்களினாலேயோ மட்டும் அறிந்து கொள்ள முயற்சிக்காமல், அவர்களுடைய வாழ்க்கையின் நடைமுறை யிலே வெளிப்படும் கனிகளினாலே அவர்களை அறிந்து கொள்ள வேண்டும் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு நமக்கு கூறியி ருக்கின்ற ஆலோசனையை நாம் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். அப்படியாக, அவருடைய ஆலோச னையை கேட்காமல், தங்கள் சொந்தஉணர்வுகளின்படியும், அனுப வங்களின்படியும், தங்களை ஊழியர் கள் விசுவாசிகள் என்று அழைப்ப வர்களை நிதானித்தறிய முயற்சிக்கி ன்றவர்கள் பலவிதமான பாதமான பின்னடைவுகளை தங்கள் வாழ்விலே சந்திக்கின்றார்கள். அதனால், விசுவாச வாழ்க்கையைக் குறித்து கசப்படைந்து விடுகின்றார்கள். தேவ ஊழியர் அல்லது விசுவாசி என்று தன்னை அழைத்துக் கொள்பவர்களின் கனிகளை, ஞாயிற்று கிழமை இரண்டு மணித்தியாலங்களுக்குள் மட்டுப்படுத்தி விடக்கூடாது. கனியானது, அனுதின வாழ்விலே வெளிக்காட்டப்பட வேண்டும். அவரவர், வீட்டிலே, வேலை செய்யும் இடத்திலே, பாடசாலையிலே, கடைத் தெருக்களிலே, வசிக்கும் அயலிலே, உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் மத்தியிலே வெளிக்காட்டப்பட வேண்டும். வாரந்தோறும் ஞாயிறு ஆராதனைக்கு செல்வதும், கிழமை நாட்களிலே ஜெப கூட்டங்கள் மற்றும் வேதப்படிப்புக்களில் கலந்து கொள்ளுதல், உபவாச ஜெபங்களில் பங்கேற்றல், தசமபாகம் காணிக்கைகளை செலுத்துதல் போன்றவைகள் அவசியமானவைகள். ஆனால், அவைகளை செய்து கொண்டும், தங்கள் இருதயத்திலே பெருமை கொண்டிருந்தால், அப்படிப்பட்ட விசுவாசியின் வாழ்விலே தேவன் விரும்பும் கனிகள் இருக்காது. பிரியமான சகோதர சகோதரிகளே, கனி கொடுக்கும் வாழ்க்கை மிகவும் அவசியமானது. அதையே தேவனாகிய கர்த்தர் விரும்புகின்றார். "ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்." கனிகொடுக்கும் வாழ்வது கடினமானது. முனித பெலத்தால் கூடாதது. ஆனால், நாம் செய்து முடிக்க முடியாதவைகளை செய்யும்படிக்கு தேவ கிருபையை அனுதினமும் பொழிகின்றார்.

**எபேசியர் 5:11**

**கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, நான் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவனாக கவனமாய் நடந்துகொள்ளவும், காலத்தை அறிந்து அதைப்; காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவும் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

அடிப்படைத் தேவைகளை சந்திக்க முடியாமல் இருக்கும் இடங்களில் கூட, இன்று இன்ரநெற் ஊடகங்கள் மலிந்து போய் இருக்கின்றது. எனவே, நீங்கள் கள்ளப் போதனைகளுக்குள் அகப்பட்டுவிடாதப டிக்கு, உங்களை காத்துக் கொள்ள வேண்டும். எப்படி ஒரு விசுவாசி தன்னைக் காத்துக் கொள்ள முடியும்? முதலாவதாக, பரிசுத்த வேதாகமத்தை கருத்துடன் அனுதின மும், திரும்பத் திரும்ப வாசிக்க வேண் டும். வாசித்தவைகளை அவரவர் தன் தன் வாழ்க்கையோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அதற்கு சமமான இரண் டாவது காரியமாவது, விசுவாசிகள் அனுதினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, தனிந்திருந்து ஜெபிக்க பழகிக் கொள்ள வேண்டும். இவை இரண் டையும், கடமைக்காக செய்யாமல், கருத்துடன் செய்து வரும்போது, தேவ ஆவியானவர்தாமே, உங்களை சகல சத்தியத்திலும் வழிநடத் துவார். கோணலும் மாறுபாடுமான இந்த உலகிலே, கறையற்ற வாழ் க்கை வாழும்படிக்கு, ஜீவ ஒளியாகிய தேவ வசனத்திலே நிலை கொண்டிருக்க வேண்டும். ஊடகங்களிலே வரும் எல்லாக் காரியங் களையும் நம்பமால், அவற்றை நீங்கள் வாசித்த தேவ வார்த்தை களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். சோதித்து அறிந்து கொள்ளுங்கள். சத்தி யத்தை சத்தியமாக உபதேசிக்கும் ஒரு சபையை தெரிந்து கொள் ளுங்கள். அந்த சபையிலே நிலைத்திருந்து கனி கொடுங்கள். இன்றைய நாட்களிலே சில விசுவாசிகள் எப்படியாக சபையை தெரிந்து கொள்கி ன்றார்கள்? எத்தனை விசுவாசிகள் அந்த சபையிலே இருக்கின்றார்கள்? எத்தனை பெரிய கட்டிடம் அங்கே இருக்கின்றது? எப்படிப்பட்ட செயற் திட்டங்களை அவர்கள் நடப்பிக்கின்றார்கள்? சென்று வருவதற்கு வசதி யாக இருக்கின்றதா? தாங்கள் விரும்பினபடி வாழும் வாழ்க்கை முறை மைக்கு ஒத்திருக்கின்றதா? என்று பற்பல காரியங்களை பார்க்கி ன்றார் கள், கேட்கின்றார்கள். ஆனால், அந்த சபையானது சத்தியத்திலே நிலை த்திருக்கின்றதா என்பதை குறிக்கு பெரிதாக பொருட்படுத்திக் கொள்வ தில்லை. “ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நட வாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜ னப் படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்ற வர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.”

**யோவான் 8:32**

**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.**

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, மெய்யாகவே நான் ஆண்டவர் இயேசுவின் சீஷனாக இருக்கும்படி அவர் கூறிய உபதேசித்திலே நிலைத்திருக்க என்னை உணர்வுள்ளவனாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ பயம் ஒன்றே தேவை!

இன்று சில இடங்களிலே ஜனங்களை தங்களுடம் தக்க வைக்கும்படிக்கு, அவர்கள் மனதிலே உலகத்தையுயும், பிசாசானவனையும் குறித்த பயத்தையும் திகிலையும் உண்டுபண்ணி, அவர்களை அடக்கி ஆளுகின்றார்கள். இன்னுமொரு சாரார், வாசலை விசாலமாக திறந்து விட்டு, ஜனங்கள் எதை கேட்க விரும்புகின்றார்ளோ, அதையே அவர்களுக்கு பிரசங்கித்து வருகின்றார்கள். விலை மதிக்க முடியாத ஆண்டவராகிய இயேசுவின் இரத்தினாலே மீட்கப்பட்டு, நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட அருமையான சகோதர சகோதரிகளே, நமக்கு இருக்க வேண்டிய ஒரே பயம், அது தேவ பயம் ஒன்றே. அந்த தேவ பயத்திலே திகில் இருக்காது. பிசாசனாவன், தேவன் இருக்கின்றார் என்று பயந்து நடுங்குகின்றான். அப்படியிருந்தும் அவனோ, தான் விரும்புகின்ற அழிவையே நடப்பிக்னின்றான். நமக்கு கொடுக்கப்பட்ட ஆவி அத்தகையல்ல. "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." எனவே, நீங்கள் ஒரு மனிதனுடைய உபதேசத்தினாலே, உங்களுக்கு சாபம் வரும் என்று, அந்த மனிதனுடைய உபதேசத்தையுயோ, அவன் காண்பிக்கும் வரத்தையோ குறித்து பயந்து நடுங்கி, சபை ஆராதனைகளுக்கு சென்று வந்தால், உங்கள் வாழ்க்கையை தேவ வசனத்தோடு ஆராய்ந்து பாருங்கள். அதே வேளையிலே, ஆதி அன்பைவிட்டு விலகிச் செல்லும்படி, இலகுவான வழிகளை உங்களுக்கு காண்பிப்பவர்களைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். இலகுவான வழிகள் என்று கூறும்போது, அந்த வழிகள் ஏறத்தாழ இந்த உலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படகூடிய வழிகள். அந்த வழிகளிலே நடக்கும் போது உலகம் உங்களை பகைக்காது. அது உங்களை ஏற்றுக் கொள்ளும். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." என்று நம்முடைய எஜமானனாகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**யோவான் 15:20**

**ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள்**

**ஜெபம்**: பரலோக பிதாவே, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமலும், மனித உபதேசங்களினால் நான் திகில் நிறைந்த வாழ்க்கை வாழாதபடிக்கும், உம்முடைய சத்தியத்திலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.